# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நிதி

***2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கும்; 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்புடைமையிலிருந்து குறித்தசில ஆட்களை விலக்களிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்***

---

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2023, ஒற்றோபர் மாதம் 18 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***210 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ச.வ.ஓ. 76 /2021

**2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கும்; 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்புடைமையிலிருந்து குறித்தசில ஆட்களை விலக்களிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்கு மானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம் 2023 ஆம் ஆண்டின் ............. ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

பாகம் I

**2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தைத் திருத்துதல்**

**2.** (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 48 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்து வதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:- 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(2அ) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக, நிலையான தொலைபேசி வழியொன்றினூடாக அனுப்பப்படும் பெருந்தொகையான விளம்பரங்களின்மீது, ஒவ்வொரு செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திக்கும் 25 சதத்திலான அறவீடொன்று விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(2ஆ) உட்பிரிவு (2அ) வின்கீழ் விதிக்கப்பட்ட அறவீடு, எந்த செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திகள் தொடர்பில் விதிப்பனவு அறவிடப்படுகின்றதோ அந்த செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திகளின் வாயிலாக விளம்பரம் செய்வதற்கு உளக்கருதுகின்ற விளம்பரதாரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்தி'' என்ற சொற்பதத்திற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக-

'' ''செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்தி'' என்பது, செல்லிடத் தொலைபேசிகளினால் அல்லது நிலையான தொலைபேசி வழிகளினூடாக அனுப்பப்படுகின்ற உரையிலான செய்தியொன்று என்று பொருளாகும்;''; அத்துடன்

(2) ''பெருந்தொகையிலான விளம்பரங்கள்'' என்ற சொற்பதத்திற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக-

'' ''பெருந்தொகையிலான விளம்பரங்கள்'' என்பது, வர்த்தக நோக்கங்களுக்காக பெறுநர்களின் குழுவுக்கு செல்லிடத் தொலைபேசிகளினால் அல்லது நிலையான தொலைபேசி வழிகளினூடாக அனுப்பப்படுகின்ற உரையிலான செய்திகள் என்று பொருளாகும்;''.

பாகம் II

### *2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தைத் திருத்துதல்*

*2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் IV குக்கான அட்டவணையைத் திருத்துதல்*

***4.*** *இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாமாண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IV இன் அட்டவணை, அதன் 6 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-*

"7. *இரண்டாயிரத்து இருபத்திரெண்டாமாண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் சட்டம்.".*

பாகம் III

### *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்புடைமையிலிருந்து குறித்தசில ஆட்களுக்கு விலக்களித்தல்*

*1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்புடைமையிலிருந்து குறித்தசில ஆட்களுக்கு விலக்களித்தல்*

**5.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், -

(அ) 2020, மே 22 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்டதும், 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்டதும் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் தேதிய 2176/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளி யிடப்பட்டதுமான 2020 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்ட தடைகள் மற்றும் மட்டுப்பாடுகள் காரணமாக, 2021, நவம்பர் 12 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் இலங்கைச் சுங்கத் திலிருந்து அப்புறப்படுத்தப்படாததுமான ஏதேனும் மோட்டார் வாகனத்தை; அல்லது

(ஆ) 2021, நவம்பர் 12 ஆந்தேதியன்று அல்லது அதன் முன்னர் இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்பட்டதும், இதற்கான அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி செலுத்தப்படுவதற்கு பொறுப்பாகவுள்ள ஏதேனும் வரி செலுத்தப்படாமை காரணமாக, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று இலங்கைச் சுங்கத்திலிருந்து அப்புறப்படுத்தப்படாததுமான மின்சாரத்தின்மூலம் உந்தப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தை,

இறக்குமதிசெய்த ஆளொருவர், 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழான மிகைக்கட்டணமொன்றுடன் வருமதியான வரித்தொகையைச் செலுத்துவதற்கமைய, இலங்கைச் சுங்கத்திலிருந்து அத்தகைய வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

வரியைச் சேகரித்தல்

**6.** (1) (அ) ஐந்தாம் பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தை இறக்குமதிசெய்த எவரேனுமாள் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து அறுபது நாட்களினுள், இதற்கான அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி வருமதியான வரித்தொகை, இலங்கைச் சுங்கத்திலிருந்து அவ்வாகனத்தை அப்புறப்படுத்தும் தேதியில், கடன்பத்திரத்தைத் திறக்கின்ற தேதியில் வருமதியான மொத்த வரித்தொகையின் 10% மிகைக்கட்டணத்துடன் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்;

(ஆ) ஐந்தாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட மின்சாரத்தின்மூலம் உந்தப்பட்ட ஏதேனும்மோட்டார் வாகனத்தை இறக்குமதிசெய்த எவரேனுமாள், இச்சட்டம் நடைமுறைக்குவரும்

தேதியிலிருந்து அறுபது நாட்களினுள், இதற்கான அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி வருமதியான வரித்தொகையை, கடன்பத்திரத்தைத் திறக்கின்ற தேதியில், கடன்பத்திரத்தைத் திறக்கின்ற தேதியன்று வருமதியான மொத்த வரித்தொகையின் 10% மிகைக்கட்டணத்துடன் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுப்பனவுகளைப் பெற்றதன்மேல், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இலங்கைச் சுங்கத்திலிருந்து அத்தகைய வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கு அனுமதி வழங்குதல் வேண்டும்.

(3) ஏதேனும் சுங்கத் தீர்வையைச் சேகரித்தலும் அறவிடுதலும் தொடர்பாக (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பாகத்தின்கீழான வரியைச் சேகரிப்பதற்கும் அறவிடுவதற்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**7.** இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய- பொருள் கோடல்

"சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"மின்சாரத்தின்மூலம் உந்தப்படும் வாகனம் என்பது, உந்தப்படுதலுக்கென மின்சார மோட்டாரை மட்டும் கொண்டுள்ள ஏதேனும் மோட்டார் வண்டி என்று பொருளாகும்;

"மோட்டார் வாகனம்" என்பது-

(அ) வீதிகளில் பயன்படுத்தப்படுவதற்காக உட்கருதப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட ஓர் உழவுயந்திரம் அல்லது இழுவைவண்டி யுட்பட, பொறிமுறையில் அல்லது மின்சாரத் தின்மூலம் அல்லது சூரியசக்தியினால் உந்தப் பட்ட ஏதேனும் வாகனம் அல்லது திரவப் பெற்றோலிய வாயுவினால் உந்தப்பட்ட வாகனம் அல்லது மாற்று எரிபொருளின் மூலம் உந்தப்பட்ட வாகனம் என்று பொரு ளாகும் ஆனால் வீதியுருளை ஒன்றை உள்ளடக்காது;

(ஆ) பொறிமுறையில் அல்லது மின்சாரத்தின் மூலம் அல்லது சூரியசக்தியினால் உந்தப்பட்ட ஏதேனும் வாகனம் அல்லது திரவப் பெற் றோலிய வாயுவினால் உந்தப்பட்ட வாகனம் அல்லது மாற்று எரிபொருளின் மூலம் உந்தப்பட்ட வாகனம் அல்லது மட்டப்படுத்து தல், சேறுவாருதல், மண்ணகற்றுதல், காட்டியல் அல்லது ஏதேனும் ஒத்த தொழிற்பாடு போன்ற கமத்தொழில் அல்லது நிருமாணஞ்சார் நோக்கமொன்று சம்பந்த மாக நிலத்தில் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட வாகனம் என்று பொருளாகும். ஆனால் வீதியுரளை ஒன்றை உள்ளடக்காது; அத்துடன்

"வரி" என்பது, ஒரு மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்தல் தொடர்பாக அட்டவணையிற் குறிப்பீடுசெய் யப்பட்ட சட்டங்களின்கீழ் செலுத்தப்படற்பாலதான அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் வரி, தண்டம், மிகைக்கட்டணம், அறவீடு, தீர்வை, விதிப்பனவு அல்லது உதவுதொகை என்பவற்றை உள்ளடக்கும்.

**8.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**அட்டவணை** *(பிரிவுகள் 5 மற்றும் 6)*

*1. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்;*

*2. 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டம்;*

*3. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்;*

*4. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்திச் சட்டம்;*

*5. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம்.*